**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று,மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டில் உதவியாக கிடைத்திருந்த ரூபா 772,225 ஆன office package புத்தகங்களிலிருந்து | 2022 ஆண்டில் கணக்கு ஊடாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கீடு செய்ய வெண்டிய சரியான கணக்கை இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | விடுபட்டிருத்தல் சரி செய்வதாக ரூபா 772,225 இனை ஏனைய செலவின கணக்கிற்கு கணக்கீடு செய்த காரணத்தால் சொத்துக்கள் மற்றும் உதவி ரூபா 772,225 குறைத்து காட்டிருந்தது. | | கணக்கீடு செய்ய வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் சுழற்ச்சி நிதியத்தின் கடன் அறவிடல் ரூபா 200,000 ஆன தொகை ஆண்டில் வருமானமாக கணக்கீடு செய்த காரணத்தால் சுழற்ச்சி நிதியம் ரூபா 200,000 இனை குறைத்து மற்றும் ஆண்டில் மிகை ரூபா 200,000 இனை கூடுதலாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 200,000 ஆன தொகை ஏனைய பெறுவனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. இந்த வருடத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயங்கள் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கூட்டுறவு சங்க கடன்கள் | 47,164,884 | மீதி உறுதிப்படுத்தல்கள் | மீதி உறுதிப்பாடுகளை பெற்றுத் தருமாறு சங்சங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையும் மீதி உறுதிப்பாடுகளை சமர்ப்பிக்கவில்லை என. | மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தீர்க்கப்படாத முற்பணங்கள் | 45,525 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இது தொடர்பான தகவல்களை கண்டறிவதன் கடினம் மீது மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக. | -மேற்படி- |
| (இ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 20,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இது தொடர்பான தகவல்களை கண்டறிவதன் கடினம் மீது மீதி உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக. | -மேற்படி- |
| (ஈ) | கடன்களை வழங்குதல் ஊவா மாகாணம் | 5,439,905 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இது தொடர்பான தகவல்களை கண்டறிவதன் கடினம் ஆகையால் | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உறுதிப்படுத்தல்களை சமர்பபிக்க முடியாதுள்ளதாக. | |
| (உ) | கிடைக்க வேண்டிய பங்களிப்பு பண ஆரம்ப மீதி மாற்றம் | 4,782,545 | ஆரம்ப மீதி மாற்றமடைந்தற்கான சான்றுகள் | 2,3,4 ஆம் பின் இணைப்பகளினூடாக ஆவண ரீதியான சான்றுகளை சமர்பபிப்பதாக. | மாற்றத்திற்கான சான்றுகள் சமர்ப்பிக்க செயற்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைக | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 பந்தியில் உள்ளடங்கிய நிதிப் பிரமாணம் 877(1)(இ) | நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கு சுற்றறிக்கை பிரகாரம் உரிய அங்கீகாரத்தை பெற்று அதன் பிரதியொன்று அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு வரவு செலவு திட்டத்திற்காக உரிய முறையில் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக. | வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க பொறுப்பேற்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 68,573,375 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 137,166,920 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 68,593,545 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிற்கு பங்களிப்புக்களிலிருந்தான வருமானம் ரூபா 53,966,088 ஆல் குறைவடைந்தமை, ஏனைய வருமானம் ரூபா 2,567,289 ஆல் குறைவடைந்தமை மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 2,336,322 ஆல் குறைவடைந்தமை போன்றே, கூட்டுறவு கொண்டாட்ட செலவினங்கள் ரூபா 3,839,625 ஆல் அதிகரித்தமை மற்றும் கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்கான செலவினங்கள் ரூபா 8,618,370 ஆனமை முக்கிய காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கூட்டுறவு சங்க கடன்கள் | | |
| (i) 2021 திசெம்பர் 31 திகதி 54 செயலிழந்த சங்கங்களிலிருந்து ரூபா 31,287,451 மற்றும் இரண்டு செயற்படும் சங்கங்களிலிருந்து ரூபா 3,016,480 வுமாக கூட்டுத் தொகை ரூபா 34,303,931 ஆன நிலுவை கடன் மீதியொன்று மற்றும் வட்டி ரூபா 8,048,998 அறவிட வேண்டியதாக காணப்பட்டன. மீளாய்வாண்டில் எந்தவொறு தவணையோ அல்லது வட்டிப் பணமோ அறவிடப்பட்டிருக்காததுடன் அக் கடன் மற்றும் வட்டி 09 ஆண்டுகள் முதல் 57 ஆண்டுகள் வரையான காலத்தினுள் அறவிடப்படாது நிலவும் மீதிகளாவதுடன் அவற்றில் 20 சங்கங்களுக்கு வழங்கிய ரூபா 8,450,900 கடன் தொகையிலிருந்து எந்தவொறு கடன் தவணையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் செயலிழந்த சங்கங்களாக இனங்காணப்பட்ட 11 சங்கங்கள் மீளாய்வாண்டினுள் செயற்படும் சங்கங்களாக இனங்காணப்பட்டிருந்தன. | அனைத்து மாகாணங்களையும் இணைத்துக் கொண்டு இக் கடன் அறவிடும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது. தற்போது மாகாண அலுவலர்களூடாக இக் கடன் தொடர்பான விரிவான தகவல்களை பெற்று கடன் அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | விரைவில் கடன்களை அறவிடக் கூடியவாறு பொருத்தமான செயன் முறையொன்றை செயற்படுத்தி கடன் தொகை மற்றும் வட்டி தொகையை அறவிட செயற்பட வேண்டும். |
| (ii) செயற்பாட்டுக் கடனாக காட்டியுள்ள 2012 ஆண்டில் வரையறுக்கப்பட்ட கொபெய்கனே பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கியிருந்த ரூபா 3,000,000 ஆன கடனை 54 தவைணகளில் செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதும் அக்கடனிலிருந்து 2013 ஆண்டில் மாத்திரம் ஒரு தவணை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த சங்கத்தின் அலுவலர்களை 2021.11.30 திகதி அழைத்து கலந்துரையாடிதாக, மேலும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் வடமேல் மாகாண ஆணையாளர் ஊடாகவும் இக்கடனை அறவிடுவது தொடர்பாக சங்கத்தை அறிவூட்டியுள்ளதாக. | உடன்படிக்கை பிரகாரம் கடனை அறவிட செயற்பட வேண்டும். |

(ஆ) சுழற்சி நிதியம்

------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதியத்திலிருந்து வடமத்திய மாகாண கூட்டுறவு சங்கங்களிற்கு 2011 ஆண்டில் வழங்கிய மூபா 20 மில்லியன் கடன் தொகையிலிருந்து, 2018 ஆண்டின் பின்னர் எந்த தொகையும் அறவிடப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 13,226,500 ஆறவிட வேண்டியதாக இருந்தது. | வடமத்திய மாகாணத்திலிருந்து மாத்திரம் 2021.12.31 திகதியன்று ரூபா 5,926,500 ஆன நிலுவை மீதியொன்று காணப்படுவதாக. | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ii) | கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்திற்கு நிதியத்திலிருந்து 2011 ஆண்டு ரூபா 152.5 மில்லியன் வழங்கியிருந்ததுடன் 2012 ஆண்டு மாத்திரம் ரூபா 60 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியன்று மேலும் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 92.5 மில்லியன் ஆனது. | இது தொடர்பாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஊடாக கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தை அறிவூட்டியுள்ளதாக எவ்வாறாயினும் இது தொடர்பாக சாதகமான பதிலொன்றை வழங்கியில்லையென. | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நடைமுறை சொத்தின் கீழ் காட்டியிருந்த 1997 ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 2,666,000 ஆன கூட்டுறவு பாடசாலை கடன் மற்றும் 2012 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் ரூபா 1,838,512 ஆன செயலாற்றல் முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுறவு பாடசாலை கடன் தொடர்பான தகவல்களை கண்டறிவதன் கடினம் காரணமாக தீர்ப்பது தாமதித்துள்ளதாக 2021 வழங்கிய செயலாற்றல் முற்பணத்திலிருந்து ரூபா 161,088 இனை 2021 ஆண்டு தீர்த்துக் கொண்டதாக மற்றும் எஞ்சிய தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கடன் மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று பெறவேண்டிய பங்களிப்பு மீதி ரூபா 174,682,949 ஆனதுடன் அதிலிருந்து ரூபா 98,319,008 தொகை மற்றும் ரூபா 30,830,583 தொகையாக கூட:டுத்தொகை ரூபா 129,149,591 இனை அதாவது 74 சதவீதமான உயர் வீதமொன்றை வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சங்கத்தினால் மற்றும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அரச சேவை சணச ஆகிய இரண்டு சங்கங்களிலிருந்து அறவிட | வ/ப அரச சேவை கூட்டுறவு சங்கம் மற்றம் வரையறுக்கப்பட்ட கல்வி சேவை ஊழயர்களின் கூட்டுறவு சங்கம் மாதாந்தம் நிலுவை தொகையை செலுத்திக் கொண்டு போவதாக உருக்கு கூட்டுறவு சங்கம், நிர்வாக சணச கூட்டுறவு சங்கம் செயலிழந்த நிலைக்கு ஆகியுள்ளதாக மற்றும் மனிதவள கூட்டுறவு சங்கத்தை | பெற வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| வேண்டியதாக காணப்பட்டன. இப் பங்களிப்பு மீதியினுள் 12 சங்கங்களிலிருந்து 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை எவ்வித பங்களிப்புத் தொகையும் கிடைத்திருக்காத மீதி ரூபா 36,154,050 ஆனது. | முடிவுறுத்திவுள்ளதாக ஏனைய கூட்டுறவு சங்கங்கள் எதிர்காலத்தில் செலுத்துவதற்காக உடன்பட்டுள்ளதாக. | |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1974 ஜனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு சங்க விதிகளின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் தனது தேறிய வருடாந்த இலாபத்தின் ஒரு பகுதியை பங்களிப்பு தொகையாக கூட்டுறவு நிதியத்திற்கு செலுத்த வேண்டுமெனவும், கூட்டுறவு நிதியத்தின் நிதியை ஈடுபடுத்த முடியுமான செயற்பாடாக கூட்டுறவு கல்வி, விரிவாக்கம் மற்றும் பிரசித்தப்படுத்தல் வேலைகள், கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவ வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை வழங்குதல் என்பவற்றை காட்டப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்திற்கான கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு ரூபா 71,746,714 ஆக இருந்துடன் மொத்தச் செலவினம் ரூபா 18,185,959 ஆக இருந்தது. இச் செலவினத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோசகர்களை ஆட்சேர்க்க ரூபா 5,000,000 செலவிடப்பட்டிருந்ததுடன் அது கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவதற்காக வழங்கிய பங்களிப்பு எதுவென கணக்காய்விற்கு தெளிவாகவில்லை. | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் தெரிவு செய்யப்பட்ட நிபுணத்துவ குழுவொன்றை தொடர்புபடுத்துகையில் அவர்களுக்கு களத்திற்கு செல்லும் போது தேவையான போக்குவரத்து, தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்களை வழங்கவும், உற்பத்தி கூட்டுறவு சங்கங்களிற்காக சில சந்தர்ப்பங்களில் செலவிட தேவைப்பட்டால் அதற்காக உதவி வழங்கவும் பயன்படுத்தியுள்ளதாக. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்படுவதற்கு பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 100 நிதிக்கூற்றுக்களை பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் அதனை 69 நிதிக்கூற்றுக்கள் என திருத்தியிருந்ததுடன் 39 சங்கங்களிலிருந்து கடந்த ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்களாக 55 நிதிக்கூற்றுக்கள் மாத்திரமே சமர்ப்பித்திருந்தன. | 2021 திருத்திய செயல்நடவடிக்கை திட்டத்தின் மூலம் 69 நிதிக்கூற்றுக்களை பெற்றுக் கொள்ள திட்டமிட்டிருந்த போதும் 55 நிதிக்கூற்றுக்கள் மாத்திரமே கிடைத்துள்ளதாக. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1983 இன் 32 ஆம் இலக்க கூட்டுறவு சங்க (திருத்திய) சட்டத்தின் 43 அ (2) பிரிவு பிரகாரம் சங்கத்தின் செயற்பாடுகளிற்கான கணக்கு மற்றும் எண்ணிக்கை தொடர்பாக ஆண்டறிக்கை ஒன்றை ஒவ்வொரு பதிவுசெய்த சங்கத்தினாலும் தயாரிக்க வேண்டியதுடன் அந்நிதிக்கூற்றை குறித்த நிதியாண்டு முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் பதிவாளருக்கு அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு நபரிற்கேனும் சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியளவில் 36 சங்கங்களினால் 60 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 02 சங்கங்கள் 2017 ஆண்டிற்குரியதாகவும் 08 சங்கங்கள் 2018 ஆண்டிற்குரியதாகவும் 14 சங்கங்கள் 2019 ஆண்டிற்குரியதாகவும் 36 சங்கங்கள் 2020 ஆண்டிற்குரியதான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் நிலைமையுடன் நாடு முடக்கப்பட்டமை மற்றும் சங்கங்கள் செயற்படாமை போன்ற விடயங்களினால் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளதாக. | கூட்டுறவு சங்க சட்டம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை பெற்றுக் கொள்ள செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆண்டு கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் 114 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்ய திட்டமிட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 31 திகதியளவில் கணக்காய்வை பூர்த்தி செய்து 43 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தன. வெளியிடப்பட்ட 43 கணக்காய்வு அறிக்கையில் 24 கடந்த ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்களாக இருந்தன. அதன் பிரகாரம் வெளியிடப்பட்ட 55 நிதிக்கூற்றுக்களில் 36 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு சங்கத்தின் கணக்காய்விற்காக வழங்கும் சாதாரண காலம் 05 நாட்கள் முதல் 30 நாட்களிற்கிடையிலான கால அளவான போதும், கணக்காய்வு ஒப்படைக்கப்பட்ட திகதி முதல் கணக்காய்வு அறிக்கை வெளியிடுவதற்காக 42 நாட்கள் முதல் 436 நாட்களிற்கிடையிலான காலமொன்று கடந்திருந்தது. | 12 சங்கங்கள் தவிர ஏனைய சங்கங்களிற்குரிய கணக்காய்வு அறிக்கை வெளியிப்பட்டுள்ளதாக. | கணக்காய்வு திட்டத்திற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டியமை. |